<u>தேதி - 03.09.2024</u>

<u>அசல் வழக்கு எண்.173/2004</u>

<u>வா.சா.2 - திருமதிஅம்சத் ராணி</u>

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.</u>

<u>**2** முதல் **7** பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

அனார்கலி அவருக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்கினை 26.08.1992 அன்று பதிவு செய்யப்பட்ட கிரயப் பத்திரம் மூலம் முகமது யூனூஸ் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்தார் என்றால் அது சரியல்ல. என்னிடம் காண்பிக்கபப்டும் கிரயப் பத்திரம் தான் அந்தக் கிரயப் பத்திரம் என்றால் அது சரியல்ல. மதுரை கீழவெளிவீதி கீழ்புறம் ஆட்டுமந்தைப் பொட்டல் 1 வது காயிதே மில்லத் நகர் 1 வது தெருவில் கீழ் சரகம் டோர் நம்பர் 8/9 T.S.No.1219 நிரில் அடங்கிய சதுரடி 445-1/2 உள்ள சொத்தானது தாவா சொத்தில் கட்டுப்பட்டதா என்றால் தாவா 1 வது அயிட்ட சொத்தாகும். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண எண்.3763/1992 மேற்படி 1 வது அயிட்ட சொத்தில் கட்டுப்பட்ட சொத்தா என்றால் சரியல்ல. எனக்கு இந்த பத்திரம் பற்றி நன்கு தெரியும் என்றாலும் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது திருமண தேதி 13.11.1988 ஆகும். எனது திருமணத்திற்கு முன்பு திருமணச் செலவிற்காக 27.10.1988 அன்று 1 வது பிரதிவாதி காஜா கமாலுதின் தாவா 2 வது அயிட்ட சொத்தில் தனக்கு கிடைத்த பங்கினை அங்குபிள்ளை அம்மா அவர்களுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றாலும் அந்த கிரயப் பத்திரம் தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றாலும் அது சரியல்ல. அந்தப் பத்திரத்தில் எனது தாயார் ஜெயிலானி, எனது சகோதரியின் கணவர் தாசுதின் சாட்சி கையொப்பம் செய்துள்ளர் என்று சொன்னால் அது சரியல்ல, தாசுதின் உயிரோடு இருக்கிறார் அவரை விசாரித்தால் உண்மை தெரிய வரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது சகோதரர் காஜாகமாலுதின் 02.03.1989 ல் தனக்கு கிடைத்த பங்கினை ஆவண எண் 704/1989 மூலம் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது சரியல்ல. எனது தங்கையின் கணவர் தாசுதின் என்பவர் சாட்சி கையொப்பம்

செய்துள்ளர் என்றால் சரியல்ல. இந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், அதை வழக்கிற்காக நான் மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் எனக்காக முன்னதாக வழக்கறிஞர் நம்பி ஆரூரான் அவர்கள் ஆஜரானார் என்றால் சரிதான். அவரது அலுவலகம் கே.கே.நகரில் உள்ளதென்றால் சரிதான். எனது சகோதரர் காஜாகமாலுதின் 2008 ம் ஆண்டு புற்றுநோயால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் அவர் ஜூன் மாதம் 2006 ம் ஆண்டிலேயே புற்றுநோயால் இறந்து விட்டார். அப்போது இவ்வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். 08.06.2006 அன்று எனது அண்ணன் காஜாகமாலுதின் இறந்துவிட்டார். அவர் இறப்பதற்கு முன்னர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் சரிதான். அப்போது வாதிகள், பிரதிவாதிகள் இருவரும் மேலே குறிப்பிட்டுள்ள வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து சமரசம் பேசப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் 20.01.2008 தேதியிட்ட சமரச ஒப்பந்தப் பத்திரத்தில் எனது கையெழுத்து உள்ளது என்றால் அது சரியல்ல. மேற்படி சமரச ஒப்பந்தப்படி வழக்கை திரும்பப் பெற்றுக் கொள்வதாக ஒப்புக்கொண்டு, எனது தாயாருக்கு ரூ.2 லட்சமும், எனக்கும் எனது சகோதரிக்கும் தலா ரூ.1 லட்சமும் பெற்றுக் கொள்ள சம்மதித்தோம் என்று சொன்னால் அது சரியல்ல. மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் நான் ரூ.38,500/- டி.டி. எண்.979680 நாள் 22.01.2008 ன்படி மேற்சொன்ன பணத்தை நான் எனது அண்ணன் காஜாகமாலுதின் மகன்களிடம் பெற்றேன் என்றால் அந்த டி.டி பெற்றுக் கொண்டது உண்மைதான் ஆனால் அந்த தொகை எனது மகனின் திருமணத்திற்காக கடனாக வாங்கி, திரும்பிச் செலுத்திவிட்டேன். அந்த டி.டி.யின் நகல் எ**.**த**.**சா**.**ஆ**.1** ஆகும். அந்தப் பணத்தை நான் எப்போது யாரிடம் கொடுத்தேன் என்றால் எனது மகனின் திருமணத்திற்கு வந்த மொய்ப்பணத்தை வைத்து எனது கணவர் காஜாகமாலுதினின் மகன்களிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார். அப்போது இவ்வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். மேற்சொன்ன தொகை பெற்றதைக குறித்து நான் திருத்தப்பட்ட பிராதிலோ அல்லது எனது நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேலே

குறிப்பிட்டுள்ள 20.01.2008 தேதியிட்ட சமரச ஒப்பந்தப்படி மேலே குறிப்பிட்டுள்ள தொகையை பெற்றேன் என்றாலும், தற்போது வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றாலும் அது சரியல்ல. மேற்சொன்ன தொகை கடனுக்காகப் பெறப்பட்டது என்பதையும் அது திரும்ப செலுத்தப்பட்டது என்பதைக் காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவரின் கையொப்பம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 20.01.2008 ந்தேதிய சமரச ஒப்பந்தத்தில், 1 வது சாட்சியாக எனது கணவரும், 2 வது சாட்சியாக எனது சகோதரி ராவியத் அவர்களும் போட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தொகையைத் தவிர அன்றைய தினம் ரொக்கமாக ரூ.11,500/- மொத்தம் ரூ.50,000/- என்னால் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கை வாபஸ் பெற்ற பின்பு மீதி தொகையான ரூ.50,000/-த்தை பெற்றுக் கொள்வதாக நான் ஒப்புக் கொண்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. 20.01.2008 ந்தேதிய சமரச ஒப்பந்தப் பத்திரத்தில் ஒரு தரப்பினராக நாங்களும் மற்றொரு தரப்பினராக காஜாகமாலுதினின் வாரிசுகள் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் அது சரியல்ல. மேற்படி 20.01.2008 ந் தேதிய சமரச ஒப்பந்த பத்திரத்தில் 2 வது பார்ட்டியாக நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும், முதல் சாட்சியாக எனது கணவர் கையெழுத்து போட்டுள்ளார் என்றாலும், அதை வழக்கிற்காக நான் மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கணவரின் கையொப்பம் எனக்கு தெரிந்து அதை வழக்கிற்காக மறுக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. அதைப்போல் மற்ற வாதிகளான அனார்கலி, லைலதுல் பஜாரியா, அப்துல் சகிலா, சையது ராவியத் ஆகியோர்கள் பிரதிவாதிகளுடன் சமரச ஒப்பந்தம் செய்து தாவா வழக்கை வாபஸ் வாங்க ஒப்புக் கொண்டு, அனார்கலி 08.03.2008 ந் தேதி டி.டி.மூலமாக ரூ.49,000/- பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதே தேதியில் அனார்கலி ரொக்கமாக ரூ.1,000/- மும், மொத்தம் ரூ.50,000/- பெற்றுள்ளார் என்றால் அது சரியல்ல. அப்துல் சகிலா 17.08.2007 ந் தேதி டி.டி.மூலமாக ரூ.49,000/-மும், ரொக்கமாக ரூ.1,000/- மும், மொத்தம் ரூ.50,000/- பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

லைலதுல் பஜாரியா அவர்கள் 17.08.2007 ந் தேதி டி.டி.மூலமாக ரூ.49,000/-மும் ரொக்கமாக ரூ.1,000/- மும், மொத்தம் ரூ.50,000/- பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சையது ராவியத் அவர்கள் 29.02.2008 ந் தேதி டி.டி.மூலமாக ரூ.33,000/-மும், 26.10.2006 ந்தேதி ரொக்கமாக ரூ.10,000/- மும், 24.02.2008 ந் தேதி ரூ.6,000/-மும், சமரச ஒப்பந்தத் தேதியில் ரூ.1,000/-மும் மொத்தம் ரூ.50,000/- பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. லைலதுல் பஜாரியா அவர்கள் பல்வேறு தேதிகளில் ரூ.49,000/- டி.டி. மூலமும், ரூ.1,000/- ரொக்கமாகவும், 3 வது மகளின் திருமணச் செலவிற்காக ரூ.23, 000/- ரொக்கமாகவும், மூத்த மகனின் மருத்துவச் செலவிற்காக ரொக்கமாக ரூ.3,000/- மும், மீதி ரூ.24,000/- பணத்தை வழக்கை வாபஸ் பெறும்போது பெற்றுக் கொள்வதாக ஒப்புக் கொண்டு கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது போலவே எனது மற்ற சகோதரிகளும் எழுத்து பூர்வமாக சமரச ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்கள் என்றால் அது சரியல்ல. எனது சகோதரிகளை தாவா வழக்கில் சாட்சிகளாக விசாரித்தால் அவர்கள் மேற்கண்டவாறு பணம் பெற்றுக் கொண்ட விவரமும், சமரச ஒப்பந்தம் செய்து கொண்ட விவரமும் தெரிய வரும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது, அவர்களை சாட்சியாக விசாரித்து கொள்ளலாம். நான் பணத்தை பெற்றுக்கொண்டு வழக்கை வாபஸ் பெறவில்லை என்றால் நான் பணம் எதுவும் பெற்றுக் கொள்ளவில்லை. நான் சமரச ஒப்பந்தப்படி வழக்கை வாபஸ் பெறாததால், 4 வது பிரதிவாதி சுல்தான் அலாவுதின் என்ற சேட் எனக்கு மற்றும் எனது சகோதரிகளுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல. அந்த வழக்கறிஞர்

அறிவிப்பை நான் வாங்கிவிட்டு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னாலும், நான் வழக்கை வாபஸ் பெறவில்லை என்றாலும் சரியல்ல, எனக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தம் செய்யப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.